அலைகளைக்கடந்து

Dr. பூவை. அருள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

அலைகளை கடந்து ...

Dr. பூவை. அருள்

51/E, மாசிலாமணி நகர்,

குலவணிகர்புரம்,

திருநெல்வேலி - 627 005.

சமர்ப்பணம்

என் தந்தை தாசில்தார் **A. பூவையா** B.A.,

என் அன்னை திருமதி. **பூ. பொன்னம்மாள்**

ஆகியோரின் பாதம் பணிந்து

சமர்ப்பிக்கிறேன்.

D.A. PRABAKAR M.A., ML.,
Advocate & Notary
கௌரவ செயலாளர்,
நெல்லை மாவட்ட செஞ்சிலுவை சங்கம், திருநெல்வேலி.

அணிந்துரை

டாக்டர் அருள். இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினர். மருத்துவப்பணி ஒரு அறப்பணி என்பதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்பவர். செஞ்சிலுவை சங்கத்தின் இலவச மருத்துவ முகாம்களில் தன்னார்வமாக இவர் மருத்துவசேவை வழங்கியதன் மூலமே எனக்கு அறிமுகமானார். இவரது பயணக் கட்டுரையைப் படித்தபோது, மலேசியா, சிங்கப்பூரை நேரடியாக பார்த்து விட்ட நிறைவை ஏற்படுத்தியது.

30 ஆண்டுகளுக்கு முன்பு "இதயம் பேசுகிறது - மணியன்", கல்கண்டு தமிழ்வாணன் ஆகியவர்களின் பயணக் கட்டுரைகளை சுவாரஸ்யமாக படித்ததுண்டு. டாக்டர். அருள் அவர்களின் புத்தகம் கடந்த கல நினைவுகளை அசை போடச் செய்துள்ளது.

"தமிழ்நாட்டுக்காரர்களை இவர்கள் கொத்தடிமைகளாக மட்டுமே வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள்" என்று இவர் ஒரு இடத்தில் தாய்த்தமிழரின் இழிநிலை கண்டு வருந்தியிருக்கிறார். இன்னொரு இடத்தில் மாமனிதர் காமராசரை மஹா அலெக்ஸாண்டரையும் கூட நினைத்துப்பார்த்திருக்கிறார் இவரது பயணக் கட்டுரை படிக்கும் அனைவருக்கும் ஒரு இனிய அனுபவமாக அமையும்.

வாழ்த்துக்களுடன் ...

(signature)

முகப்பு உரை

SPEED என்று தான் இந்த நூலுக்கு பெயரிட நினைத்தேன். ஆனால் தமிழ் இருக்கும்பொழுது ஆங்கிலம் எதற்கு என முடிவெடுத்து "அலைகளை கடந்து" என்ற பெயரை சூட்டிவிட்டேன்.

வெளி நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கும் தமிழ் வாலிபர்களுக்கு. நான் மலேசியா, சிங்கப்பூர் சென்று வந்த பயண அனுபவங்களை தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் இந்த நூலை எழுதியுள்ளேன். இந்த நூலால் தமிழ் இளைஞர்களுக்கு கடுகளவேனும் உபயோகம் ஏற்பட்டதெனில் நான் பெறுமகிழ்ச்சி அடைவேன்.

அனேக வேலை பளுக்களுக்கிடையே அட்வகேட் திரு. D.A. பிரபாகர் M.A, M.L., அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை எழுதி தர சம்மதித்ததற்கு என் மரியாதை கலந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூல் உருப்பெற்று வெளிவர மிகவும் உறுதுணையாக இருந்த என் நெருங்கிய நண்பர் டாக்டர் A. சொக்கநாதன் MBBS., DO., அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

Dr. பூவை. அருள்

எந்த வாளும் அதன் உறையில் இருக்கும்பொழுது அழகாகத்தான் இருக்கும். அதை வெளியில் எடுத்து பார்த்தால் தான் தெரியும் அதன் பயங்கரம்

அலைகளை கடந்து ...

வெளிநாடு சென்று வர நம் எல்லோருக்கும், ஆசை உண்டு. என் உறவினர் ஒருவர், துபாயில் பணிசெய்து கொண்டிருந்தவரிடம், "என்னையும் ஒருமுறை துபாய் அழைத்து செல்லும்படி கேட்டேன். அவர் சொல்லுவார் உலக நாடுகளின் சில அதிசயங்களை ஒரு சேர ஒரே இடத்தில் பார்க்க வேண்டுமானால் மலேசியா, சிங்கப்பூர் ஒருமுறை சென்று வாருங்கள் என்று கூறியது என்னை யோசிக்க வைத்தது. ஆசியாவின் சிங்கப்பூர், மலேசியா ஒரு நல்ல இடம் என்று நான் கொஞ்சம் அறிந்திருந்தேன். மேலைநாடுகளுக்கு ஒப்பாக இருக்குமென அவர் அறிவுறுத்திய பின்பு தான் அந்த ஆவல் ஏற்பட்டது. அரசுப்பணியில் 32 ஆண்டுகள் ஓடி சென்று விட்டது. இருமுறை கடவுசீட்டு (பாஸ்போர்ட்) எடுத்தும் அது காலாவதியானது தான் மிச்சம். ஒரு நாட்டிற்கும், செல்லமுடிந்த பாடில்லை. "அதற்கென்று ஒரு நேரம் வரவேண்டும் அல்லவா?" என்று கிராமத்தில் அடிக்கடி பேசப்படுவதை கேட்டிருக்கிறேன்.

நான் அரசு ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்று சிறிது காலம் தனித்தொழில் (Private Practice) செய்து வந்தேன். பின்பு ஒரு தனியார் தொழிற்சாலையில் 6 1/2 வருடங்கள் மருத்துவராக பணிபுரிந்தேன். அங்கிருந்து ஓய்வு வாங்கிக் கொண்டு நெல்லைபட்டணம் வந்து சேர்ந்தேன். மருத்துவ தொழிலில் ஈடுபாடில்லை வயது முதிர்ந்து விட்டதால் இந்நிலை ?

புது நகர வாழ்க்கையில் ஓய்வான வாழ்க்கை நல்ல வசதியான பெரிய வீடு, எனது அண்டை வீட்டாரெல்லாம் மிகவும் அன்பு மிகுந்தவர்கள். அதில் ஒரு நண்பர் மிகவும் பணக்காரர், தொழில் அதிபர், இவ்வளவு இருந்தும் அவர் நல்ல குணங்கள் நிறைந்தவர். "சிங்கப்பூர், மலேசியா சென்று வரலாமா?" என்று கேட்டார். நான் "அவர் ஏதோ விளையாட்டாக கேட்கிறார் போல" என நினைத்துக் கொண்டு "கடவுசீட்டு (Passport) எல்லாம் காலம் கடந்து (Expire) போய் கிடக்கிறதே" என்று பதில் கொடுத்தேன். மேலும் 70 வயதில் எங்கே நம்மால் செல்லமுடியும் அழைத்துச் செல்பவருக்கும்,

துணைவியாருக்கும் பாரமாகத்தான் இருப்போம் என நினைத்துக் கொண்டே "ம், சரி எல்லா ஏற்பாடும் நீங்கள் செய்தால் நான் தயார்" என கூறினேன்.

சிலவேளைகளில் நன்மைகள் இயற்கையாக தன்படி நடப்பது உண்டு. இப்பொழுது நாங்கள் வாங்கி இருக்கும் வீடு வாங்கியதே ஒரு அதிர்ஷ்டமான விபத்து போன்றது தான்" அம்பாசமுத்திரத்தில் பழைய அக்ரகாரத்தில் ஓர் வீடு எனக்கிருந்தது சரியான பெரிய வீடு. பின்னால் வாய்க்கால், முன்னால் தெப்பக்குளம், நகராட்சி தண்ணீர் சதி, போர்வெல் எல்லாம் உண்டு. 10 தென்னை மரங்கள் சுற்றி இருக்கிறது. ஆனால், ஊரை விட்டு சிறிது வெளியே அமைந்துள்ளது. மற்ற இடங்களில் இருந்தால் 7 ஆயிரம் வரை வாடகை கிடைக்கும். ஆனால், இதற்கு ஆள் கிடைப்பதே பெரும் பாடாய் ஆகிவிடும். இங்கு, ஆயிரம் அல்லது ஆயிரத்துஐநூறு தான் வரும், வீட்டை சுற்றி 3 மாதத்திற்கு ஒருமுறை நான்தான் யாராவது சிறியவர்களைப் பிடித்து ஒட்டடை அடைத்துவிட்டு வருவேன். ஜன்னல் நிழல் குடை மீது கிடக்கும். இலை தழைகளை ஆறுமாதத்திற்குஒரு முறை நான் தான் சுத்தம் செய்ய வேண்டும். அந்த வீடு ஒரு நல்ல விலை கிடைத்த பொழுது அதை விற்றுவிட்டோம்.

எனக்குத் தெரியாமலேயே என் துணைவியார் நெல்லை பட்டணத்தில் தரகர் மூலம் ஒரு வீடு பார்த்து அலைந்திருக்கிறார். சும்மா ஒரு நேரப் போக்கு அவளுக்கு, ஒருமுறை நானும், அவரும் பாளை வந்திருக்கும்போது இந்த இடத்தில் ஒரு வீடு இருக்கிறது பாருங்கள் என்று சொன்னார். வாங்க வேண்டாம், பார்க்கலாம் என இருவருமே ஒரு சேர கூறிக்கொண்டு இந்த வீட்டின் முன் வந்து நின்றோம். முகப்பு நல்ல எடுப்பாக இருந்துது 8 1/2 செண்டு இடம். தரைத்தளம் மற்றும் மாடி சேர்த்து 3600 சதுர அடி என கூறினார். இவர் கையில் காசு கிடையாது வாங்க முடியாது என நான் நன்கு அறிவேன். சும்மாகாச்சும் "வாங்க முடிந்தால் வாங்கேன்" என்று கூறிவிட்டு அதை பற்றி மறந்து விட்டேன். நான் இல்லாமலேயே அந்த வீட்டுக்காரரிடம் முன் பணம் கொடுத்து விட்டாள். மூன்று மாதத்திற்குள் ஆட்டை தூக்கி மாட்டில்

போட்டு, மாட்டைத்தூக்கி ஆட்டில் போட்டு இந்த வீட்டை முடித்துவிட்டாள்.

அதே போன்று "பொராஸ்த்த ராய்க்கர்" என்ற புத்தகம் எழுதி நோபல் பரிசு பெற்ற "மிக்காய்லோ கார்ப்பசேவ்" என்ற ரஷ்ய தலைவர் மேற்கு ஜெர்மனியையும், கிழக்கு ஜெர்மனியையும் பிரித்த பெரிய பெர்லின் சுவரை இடித்து தகர்த்துவிட்டார். சீனப்பெருஞ்சுவர் உலக அதிசயங்களில் ஒன்று என்று நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். ஆனால் பெர்லின் சுவர் எப்படிபட்டது என்று நமக்கு தெரியாது.

என்னைப்போன்ற சாதாரன மனிதன் அதை பார்த்ததில்லை. பெரிய "கான்கிரீட் கல்லுகளை (Concrete Blocks) அளவு சரியாக தெரியவில்லை, மஹா பெரிய சைஸ் கற்களை இரும்பு கம்பிகளை வளைத்து ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி சேர்த்திருந்தார்களாம். உயரம், அகலம், நீளம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவு. அங்கிருந்து யாரும் இங்கு வர முடியாது. இங்கிருந்து யாரும் அங்கு செல்லமுடியாது. அந்த சுவற்றை வெல்டிங் இயந்திரத்தின் உதவியால் வெட்டி எடுத்து அப்புறப்படுத்தினார்கள். சுவரை எடுத்த பின்பு மேற்கு ஜெர்மனியையும் (பெல்ஜியம்) கிழக்கு ஜெர்மனியையும் ஒரு சேர பார்க்க முடிந்தது. அந்த படத்தை "இல்ஸ்ட்ரேட்டட் வீக்லி" என்ற ஆங்கில பத்திரிக்கையில் பார்த்தேன். மேற்கு ஜெர்மனியில் கூட, கோபுரங்கள் மாடமாளிகைகள், கிழக்கு ஜெர்மனி - ரஷ்யாவிடம் அடிமையாக இருந்த இடம் வெறும் புல், பூண்டுகள், முட்கம்பிகள் நிறைந்ததாக இருந்தது. இதிலிருந்து சுயாதீனமான நாடும், அடிமைப்பட்டுக் கிடக்கின்ற நாடும் தன் வளர்ச்சியில் எப்படி வேறுபடுகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். இப்பொழுது உலகம் முழுவதும் நல்ல செழிப்பாக தான் இருக்கிறது. அற்புதங்கள் அவ்வப்பொழுது இயற்கையாக நடக்கின்றது. எந்த அரசு ஆனாலும், எந்த அரசியல் ஆனாலும் மக்களுக்கு உணவு, உடை உறைவிடம் சரிவர கொடுத்தால் போதும், பயணக்கட்டுரை பாதை மாறுகிறதே? இல்லை, இல்லை சரியான பாதையில் தான் பயணிக்கிறோம்.

எங்கள் பக்கத்து வீட்டு சகோதரர் திரு. சந்திரசேகரன் உழைப்பால் உயர்ந்தவர். தொழில் அதிபர், மிகுந்த அன்பு உடையவர், யாருக்கும் எந்த உதவியும் செய்யக்கூடியவர், இனி அவரை எங்கள் குழு தலைவர் என்று அழைப்பதே சிறந்தது. அவருக்கு மலேசியா, சிங்கப்பூர் மற்றும் துபாய், இஸ்ரேல், எகிப்து போன்ற இடங்களுக்கு சென்று வந்த நல்ல அனுபவமுண்டு. எங்கள் குழு என்பது திரு. சந்திரசேகரன், அவர் துணைவியார், அவர்கள் புதல்வி செல்வி. லிஸி மற்றும் நானும் என் துணைவியாரும் ஆகும்.

நான் "சரி" என்று சொன்ன உடனேயே அவர் காரிலேயே அவர் துணைவியார் அவர்கள் புதல்வி மற்றும் என்னையும், என் துணைவியாரையும் ஸ்டூடியோவிற்கு புகைப்படம் எடுக்க அழைத்துச் சென்று விட்டார். புகைப்படங்கள் 1/2 மணி நேரத்தில் தயார் ஆகிவிட்டது. அந்த காலத்தில் "பாஸ்போர்ட் சைஸ்" போட்டோ எடுக்க வேண்டுமானால், படத்தை எடுத்துவிட்டு மூன்று நாட்கள் கழித்துவாருங்கள் அல்லது 7 நாட்கள் கழித்து வாருங்கள் என்று சொல்லி விடுவார்கள். 7 நாட்கள் கழித்து போய் கேட்டால் "நெகட்டிவ்" தொலைந்து விட்டது ; மற்றொன்று எடுக்கலாம் என வேதனையை கூட்டுவார்கள் ஸ்டூடியோக்காரர்கள். அந்த மாதிரி இல்லாமல் கைமேல் பலன் கிடைத்தது போன்றிருந்தது.

என் துணைவியாருக்கு ஆகாய விமானத்தில் செல்ல மிகுந்த பயமுண்டு ஆனால் எங்கள் குழு தலைவர் செல்லுகின்ற வேகத்தைப் பார்த்து, "மலேசியா, சிங்கப்பூர்" எப்பொழுது செல்லலாம் என்ற பேராவல் பற்றிக்கொண்டது. அன்றே தேர்தல் அட்டை, ரேசன் குடும்ப அட்டை எல்லாம் தேவைக்கு அதிகமாகவே நகல் எடுக்கப்பட்டன. என்னுடைய வங்கி கணக்கு புத்தகம், காசோலை நகல் எல்லாம் குழுதலைவரிடம் வந்து சேர்ந்து விட்டது. எங்கள் இருவருடைய கடவு சீட்டுகள் முறையே காலம் கடந்தவை இரண்டிரண்டாக பின் செய்து நல்ல உறையில் போடப்பட்டன. மறுநாள் காலையில் எஜெண்ட் பாய் வந்துவிட்டார். பாரங்கள், மனுக்களிலெல்லாம் கையொப்பங்கள் வாங்கப்பட்டன. செலவு தொகை "ஆன்-த-ஸ்பார்ட்" கொடுக்கப்பட்டது. மறுநாள் காலை

அம்பாசமுத்திரம் பயணம் அங்கேயே பல ஆண்டுகள் பணி புரிந்ததால் காவல்துறையினர் மற்றும் அஞ்சல்துறையினர் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தனர். 20 நாட்களில் கிடைக்க வேண்டிய "கடவு சீட்டு 11/2 மாதத்திற்கு பின் கிடைத்தது. எனக்குரியது முதலில் வந்து விட்டது. உடனே என் துணைவியார் "உங்களுக்கு மட்டும் சீக்கிரம் வந்து விட்டது, எனக்கு இன்னும் வரவில்லையே" என கூறி சிறிது நொந்து கொள்ள ஆரம்பித்தார். இதற்குள்ளாக இரண்டு, மூன்று முறை அம்பாசமுத்திரம் சென்று வந்தாகிவிட்டது. ஒவ்வொருமுறையும் காருக்கு எரிபொருள் செலவை எண்ணி பார்க்க வேண்டியதிருந்தது.

மலேசியா ஏர் வேஸ், சிக்கன பகுதியில் (Economy Compartment) பிரயாணச் சீட்டு எடுக்கப்பட்டு விட்டது. குழு தலைவர் எல்லோருடைய கடவுசீட்டுக்களையும் தன் வசம் ஒரு அழகிய பையில் போட்டு, நுழைவுச்சீட்டு (Visa) உட்பட, ஸிப் போட்டு பத்திரமாக தன் வசம் வாங்கி வைத்துக் கொண்டார்கள். நானும், துணைவியாரும் 24/07/2010 சென்னையிலுள்ள என் மகள் வீட்டிற்குச் சென்று விட்டோம். அவளுக்கு இரண்டு மகன்கள் மூத்த பையன் 9ம் வகுப்பு படிக்கிறான், கணினியில் மலேசியா, சிங்கப்பூரில் பார்க்க வேண்டிய இடங்கள் என்ற பகுதியில் நுழைந்து அவன் பாட்டிக்கு விளக்கமாக காட்டி கொண்டிருந்தான்.28/07/2010 மாலை, குழுத்தலைவர், அவர் உறவினர் வீட்டிற்கு வந்து சேரும்படி எங்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்ததின் பேரில் அங்கு சென்று சேர்ந்து கொண்டோம்.

சென்னை விமான நிலையத்தை இரவு 9.30 மணி அளவில்தலைவர் காரிலே சென்று அடைந்துவிட்டோம். இதற்கிடையில் நெல்லையில் துணி, மணி கொள்முதல் நடந்தது. எல்லா சாமான்களையும் எப்படி கட்ட வேண்டும் (Packing) என்று தலைவர் சொல்லிக்கொடுத்தபடி, சிறிய பூட்டுப் போட்டு கட்டி எடுத்து சென்றிருந்தோம்.

விமான நிலையத்தை சீக்கிரமாக வந்தடைந்து விட்டோமே என சந்தேகம் எனக்கிருந்து. ஆனால் வந்த நேரம் சரிதான் என பின்னால் நினைத்துக் கொண்டேன். விமான நிலையக் கட்டிடம் உயரம், நீளம், அகலம் எல்லாமே மிக

பிரமாண்டம், ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கே 1 கிலோமீட்டர் அளவிற்கு அதிகமாகவே நடக்க வேண்டியதிருக்கிறது. மாடிக்குச் செல்ல வேண்டும். கீழ் தளத்திற்கு செல்ல வேண்டும் என்றால் "எக்ஸ்கலேட்டர்" கள் இருக்கின்றன அது போக கடைகள் வேறு இருக்கிறது. நிலையத்திற்குள் நுழைந்ததும் நம் நல்ல கட்டப்பட்டிருக்கும் பெட்டிகளை எடை போட்டு அடையாள அட்டைகள் ஒட்டப்பட்டு "கன்வேயர் பெட்டில் போடப்படுகின்றன. நம் கையில் வைத்துக் கொள்ள சிறிய அளவு கைப்பெட்டிகள் அனுமதிக்கப்படுகின்றன. அவற்றிலும் அடையாள அட்டை ஒட்டப்படுகின்றன. ஆனால் அவைகளை "ஸ்கேனர்" இயந்திரத்தில் போட்டு தகுந்த இடத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் சிறு தள்ளுவண்டியில் போட்டு தள்ளிக் கொண்டு வந்தோம். நான் வயது முதிர்ந்தவன் என்பதால் பொறுப்புகளை மற்றவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். ஒருமாதிரியாக மேல்தளத்தை சென்றடைந்து விட்டோம். எங்கு பார்த்தாலும் சீருடை அணிந்த காவலர்கள் (Security)

எங்களுக்கு குடிதண்ணீர், கழிவறை வசதி, சிற்றுண்டி எல்லாமேஅங்குதான் கொஞ்சம் விலை அதிகம். எல்லா சரி பார்த்தலும் (Checking) முடிந்து நீங்கள் அங்கு வந்து இருக்கிறீர்கள். எங்கும் செல்லமுடியாது செல்ல அனேகமாக உங்களுக்கு வழியும் தெரியாது. இதற்கிடையில் தலைவர் துணைவியாரின் கைப்பையில் உள்ள "சரி பார்த்தல் அட்டை" எங்கோ விழுந்திந்தது. காவலர் அவர்களை தனியே "நீங்கள் கீழே சென்று வேறு அட்டை ஒட்டி வாருங்கள் என்று அனுப்பிவிட்டார். அவர்கள் நல்ல புத்திசாலி. நாங்கள் அங்கு வருவதற்கு முன் இருந்த பெஞ்ச் அருகில் சென்று தேடிப்பாத்திருக்கிறார்கள். அதை எடுத்து கைப்பயில் மாட்டிக் கொண்டு மறுபடி வந்து சேர்ந்து கொண்டார்கள். எல்லோருக்கும் அப்பொழுது தான் மூச்சு வந்தது.

இரவு10 மணிக்குகூட பயணிகள் கூட்டம். அவர்களை வழி அனுப்ப வந்த கூட்டம் அதிகமாகவே இருந்தது. செக்யூரிட்டி முடிந்து நாம் வந்து சேர்ந்த இடத்தில் பயணிகள் மட்டும் இருந்தார்கள், அநேகமாக மலேசியா, சிங்கப்பூர்

செல்பவர்கள் கொத்துக் கொத்தாக அங்கு சாதாரண பணிகளுக்கு (Labour) செல்பவர்களாகத்தான் தோன்றினார்கள். அநேகமாக பெரிய கூட்டமாக இலங்கை செல்பவர்கள் அதிகமாக தெரிந்தார்கள். அவர்களுடைய ஆடை, அலங்காரங்களை வைத்து அவர்கள் இலங்கை செல்பவர்களாய் இருக்கலாம் என ஒரு கணிப்பு.

11 மணிக்கு தான் விமானம் சென்னைத் தளத்திலிருந்து புறப்படுமென தெரிந்து கொண்டேன். அப்படியானால் ஏன் 10 மணிக்கே இங்கு கொண்டு அமரச் செய்துவிட்டார்கள் என்ற கேள்வியும் மனதில் தோன்றியது. விமானம் புறப்படும்பொழுது யாரோ ஒருவர் வர தாமதமானாலும் விமானம் புறப்படுவது தாமதம் ஆகுமல்லவா! அதை தவிர்க்கும் விதமாகத்தான் இந்த ஏற்பாடு. விமானம் சிறிது தாமதமானாலும் புறப்பட வேண்டியது. போய் சேர வேண்டிய இடம் எல்லாவற்றிலும் காலதாமதமாகி பிரயாணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் அல்லவா?

11 மணிக்கு விமானம் உள்ளே செல்ல அனுமதித்தார்கள். எங்கள் இருக்கைகள் விமானத்தின் பின்பகுதி, வால்பகுதியின் பக்கத்தில் இருந்தது. தலைவரின் புதல்வி லிஸி எப்பொழுதும் ஜன்னல் ஓரத்தில்தான் இருப்பார். வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டே வருவார். எங்கள் குழுவில் அவர்தான் மிக இளையவர். அவர்தான் MBA படித்துக் கொண்டிருப்பதினாலும் இந்த எழுத்து வேலைகளை பார்த்துக் கொள்வார். விமான பணிப்பெண், இருக்கையில் நாங்கள் உட்கார்ந்த உடன் ஏதோ ஒரு நீள பேப்பரைக் கொண்டு வந்து கொடுத்தார். அது பேங்கில் பணம் போடும் சீட்டு மாதிரி இருந்தது. அது விமான நிலையத்திலிருந்து வெளியே செல்லும்பொழுது அதிலுள்ள துண்டு சீட்டை 'கடவுச்சீட்டுடன்' கொடுத்தால் தான் அடுத்த விமான நிலையத்திலிருந்து வெளியே செல்ல முடியுமென அறிந்து கொண்டேன். 'லிஸி' அதில் கேட்டுள்ள விபரங்களை எல்லாம் நிரப்பி எங்கள் எல்லோரிடமும் கையொப்பம் பெற்று தலைவரிடம் கொடுத்துவிட்டார். அவைகளை தலைவர் அவரவர் கடவுச்சீட்டுடன் வைத்து தன் கைப்பையில்

பத்திரப்படுத்தி கொண்டார்கள். எங்களுடன் ஒரு பத்து தமிழ் இளைஞர்க்ள் வந்திருந்தனர். மலேசியாவில் வேலைக்கு செல்வதற்கு, அவர்களுக்கு அந்த பாரங்களை நிரப்ப தெரியவில்லை. லிஸி உதவி செய்தார். அவர்களிடம் பேனா கூட கிடையாது. தலைவரும் உதவி செய்தார். அவர்களுக்கு கடவுச்சீட்டு, நுழைவுச்சீட்டைப் பற்றி எந்த ஞானமும் இல்லை. மொத்தமாக ஏதோ ஒரு சீட்டை ஒரு ஆள் வைத்திருந்தார். அதில் அநேக விபரங்கள் இல்லை. அப்பொழுதே இவர்கள் மலேசியா சென்று என்ன செய்யப் போகிறார்களோ? என்று நினைத்தேன். தலைவர் அவர்களிடம் பேச்சு கொடுத்தார். அவர்கள் மாதம் 6000 த்திலிருந்து 8000 வரையிலான வேலைக்கு ஏதோ பணிக்கு செல்வதாக கூறினார்கள்.

நான் யோசிக்க ஆரம்பித்தேன். நம் இந்தியாவிலேயே அதிலும் சென்னையிலேயே மாதம் 5000 ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைக்க ஆரம்பித்துவிட்டதே, வீட்டுச்சாப்பாடு சாப்பிட்டுவிட்டு இங்கேயே ஒரு வேலையைத்தேடி கொள்ளலாமே என்று நினைத்தேன். அதில் ஒருவர் சொல்கிறார், "நல்ல கட்டும், செட்டுமாக இருந்தால், தங்கும் இடவசதிகள் குறைவாய் இருந்தாலும் மாதம் 2000 ரூபாய் சேமிக்கலாம், இது இந்தியாவில் முடியுமா? என கேட்கிறார். முடியுமா என்பது எனக்குத் தெரியாது. ஒருவர் சொல்கிறார் 'சொந்த ஊர், ஏது தேசத்திற்குச் சமம்' என்று, இப்படியே ஊரில் இருந்து போனவர்கள் அனேகர்! என்னைப்போல்! "திரைக்கடல் ஓடியும், திரவியம் தேடு" என்ற பழமொழியை மறந்து போனோமோ?

இருக்கைகளின் முன்னால் சிறிய தொலைக்காட்சி திரை இருந்தது. ஹெட்போன் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. ஏதோ சாப்பிடக் கொடுக்கிறார் என அவசரமாக வாங்கி பார்த்து ஏமாந்தேன். அடுத்து ஒலிபெருக்கியில் "சுசாமோ, சிகி, தேசோ" என்று ஒலி வந்தது. ஒன்றும் விளங்கவில்லை. அது மலாய் பாஷையாம். ஆசியா கண்டத்தினருக்கு அவர்கள் தாய்மொழி மேல் அவ்வளவு பற்றுதல். கடைசியில் சைனாக்காரர்கள் உலக அளவில் வியாபாரம், தொழில் செய்வதற்கு ஆங்கிலம் படிக்க வேண்டிய

நிலை வந்து விட்டது. மலாய் பாஷைக்கு எழுத்துவடிவம் கிடையாது. ஆனால் தங்கள் மொழியை ஆங்கில மொழி வடிவில் எழுதுகிறார்கள்.

KELUAR என்று மேலே எழுதிவிட்டு Exit என்று கீழே எழுதி இருக்கிறார்கள். அடுத்து TANDOS என்று மேலே எழுதிவிட்டு Toilet என்று கீழே எழுதியுள்ளார்கள். பெண்கள் டாய்லட்டிற்கு CHENDOS என எழுதிருக்கிறார்கள். இது ஆங்கிலம் தெரிந்த நம்மை மிகவும் குழப்புகிறது. டாயலட் என்று நினைத்து வேறு எங்காவது போய்விடக்கூடாதல்லவா

எல்லா மொழிகளில் உள்ள வார்த்தைகளும் மலாய் மொழியில் இருக்கிறது. "காடி" என்றும் ஹிந்தி வார்த்தையைத்தான் மோட்டார் கார் வாகனத்திற்கு உபயோகிக்கிறார்கள். தமிழ் பேசுகிறவர்கள் மலேசியா, சிங்கப்பூரில் இருக்கிறார்கள். உங்களுக்கு "எந்த ஊர்" என்று கேட்டால், "இதே ஊர்தான்" என்கின்றனர். எப்படி இவ்வளவு சுத்தமாக தமிழ் பேசுகிறீர்கள் என்றால், "எங்கள் முன்னோர்கள் காலத்திலேயே இங்கு வந்து குடியமர்ந்து விட்டோம்" என கூறுகிறார்கள். நல்ல மகிழ்ச்சியான செய்தி தான். கடைகளில் பொருள் வாங்கச் சென்றால் நம் உடை (சேலை) நடை பாவனைகளை வைத்து நம்மை தமிழர்கள் விசாரிக்க வந்து விடுகிறார்கள். நாம் ஆங்கிலம் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை.

"குரங்கள் லாட்சு" என்றால், மெதுவாகச் செல்லவும் என நான் சொல்கிறேன் என் துணைவியார் பேருந்து நிறுத்தம் என சொல்கிறார். இதுவரை சரியான விடை தெரியவில்லை. விமானத்தில்உட்கார்ந்த உடன் ஆங்கிலத்தில் தங்கள் ஸிட் பெல்ட்டை நன்றாக கட்டிக் கொள்ளுங்கள். விமானம் இன்னும் சிறிது நேரத்தில் புறப்பட இருக்கிறது. தங்கள் விமான ஒட்டுனர் சிறந்தவர், தங்களை பாதுகாப்பாக அழைத்துச் செல்வார்" என்று அறிவிப்பு வந்தது.ஒரு இனிமையான குரல் படைத்த பெண்தான் பேசினார். அடுத்து ஓட்டுனர் ஆங்கிலத்தில் வணக்கம் தெரிவித்துக் கொண்டார்.

விமானம் ஒடுபாதையில் "தட தட" என ஒட ஆரம்பித்தது, விமான பணிப்பெண்கள் மலேசிய சீருடைகள்

அணிந்து அங்குமிங்கும் நடக்க ஆரம்பித்தனர். செல்போன் உபயோகித்தவர்களை உபயோகிக்க வேண்டாமென கேட்டுக் கொண்டனர். சீட் பெல்ட் போடாதவர்களை போடச் செய்தனர். தலைக்கு மேல் வாய் பிளந்து கிடக்கும் பொருள் வைக்கும் அலமாரிகளை டொக், டொக் என மடினார்கள். இரண்டொரு கோட்டு போட்ட ஆண் விமான பணி ஆட்களும் நின்றிருந்தனர். உணவு வண்டிகளை தள்ளிக் கொண்டு உயர் வகுப்பு பயணிகள் இருக்குமிடத்தை நோக்கி தள்ளிக் கொண்டு சென்றனர். அவர்களிடமே கேட்டுவிட்டேன். "I like to have some water to drink" என அவர்கள் "Wait, Wait, I will come" என்று என்னை கையமர்த்தி விட்டனர்.

உச்சக்கட்டமாக நம் தமிழ் இளைஞர்கள் அந்த பணிப்பெண்களிடம் மது பானங்களை மாற்றி, மாற்றி, பீர், விஸ்கி என்று கேட்டு தொந்தரவு செய்து பெற்றுக் கொண்டனர், ஒரு பெண், "Oh God" என்று நொந்து கொண்டு மறைந்து விட்டார், மாற்று நாட்டினர் நம்மை ஒரு விதமாகத்தானே நினைப்பார்கள். நான் ஒரு டாக்டர் என்று கூறிக் கொள்வது எப்படி முடியும் ?

நான் சிலமுறை இந்தியாவிற்குள்ளேயே விமானத்தில் சென்றிருக்கிறேன். வடக்கு வங்காளம், டார்ஜிலிங் - சிலிகுரி போன்ற இடங்களுக்கு 'பாக்டோக்ரா' தான் விமான நிலையம். அங்கிருந்து டெல்லி விமான நிலையம் சென்றுள்ளேன். பாக்டோக்ராவிலிருந்து, கல்கத்தா, சென்னை, மதுரை கூட பயணம் செய்திருக்கிறேன். நல்ல கவனிப்பு இருந்தது, விமானமும் நல்ல ஆடி, அசையாமல் கொண்டு சென்றது.

மலேசிய ஏர்லையன்ஸ் விமானம், அங்கும் இங்கும் ஆட ஆரம்பித்தது, ஆங்கிலத்தில் ஆண் குரல், "கொடிய காற்று அடிப்பதால் தாங்கள் சீட் பெல்ட்டை நன்றாக கட்டிக் கொள்ளவும், ஒருவரும் பயப்பட தேவையில்லை" என்று ஒலித்தது கொடிய காற்று என்று சொல்லி விட்டு பயப்பட வேண்டாம் என்றால் எப்படி? மேக மண்டலங்களில் சிறு கூட்ட மேகங்களை விமானம் கடக்கும்பொழுது அசைவு ஏற்படும் போல், அதுபோக "வான மண்டலங்களில் சிறு, சிறு காற்றுப் பையில் வெற்றிடங்கள் ஏற்படும் பொழுது விமானம் கீழிறங்குவதும்

மேலே செல்வதும் சாதாரணம், ஆனால் புதிதாக அல்லாவிட்டாலும், சாதாரண பயணிகளுக்கும் பயம் அதிகரிக்கத்தானே செய்யும், விளக்குகள் அனைக்கப்பட்டன. விமான பணிப்பெண்கள் எங்கோ மறைந்து விட்டனர். சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை. இரண்டு கப் தண்ணீரும் ரஸ்னா போன்ற நீரும் கிடைத்ததோடு சரி. இரவு இந்திய நேரப்படி 2.30 மணி மொத்த பயண நேரம் 3 மணி, சென்னையிலிருந்து, கோலாலம்பூர் - மலேசியா மூன்று மணி நேரப்பயணம். ஆனால் நம் நேரத்திற்கும், மலேசிய நேரத்திற்கும் 3 மணி நேர வேறுபாடு உண்டு. நாம் சென்னையிலிருந்து இரவு 11 மணிக்கு புறப்பட்டால் - மலேசியாவில் 2.45 ஆகும். அப்படியானால் நாம் காலை 5.45 க்குத்தான் மலேசியா சென்று சேருவோம். ஆனால் காற்றும், மற்றும் மேக மூட்டத்தால் காலதாமதமாகவே கோலாலம்பூர் விமான தளத்தை காலை 6.20 மணியளவில் சென்றடைந்தோம். இந்திய நேரப்படி நான்கு மணி அளவில் விளக்குகள் போடப்பட்டன. சிறு தட்டுகளில் உணவு பரிமாறப்பட்டன. ஒன்றும் ருசிக்கவில்லை. 1 கப் பெப்ஸியை குடித்துவிட்டு எல்லாவற்றையும் மூடி வைத்து விட்டோம். எங்கும் எதையும் வாங்கிச் சாப்பிட மனம் எண்ணவில்லை. பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு மலேசியாவில் செலவுக்கு பணமில்லாது திண்டாடக்கூடா தல்லவா? எங்கள் குழு தலைவர், “விமான பணியாளர்கள் இம்முறை நம்மை சரிவர கவனிக்கவில்லை” என்று சிறிது வருத்தத்தை தெரிவித்துக் கொண்டார். மேல் வகுப்பு, கீழ் வகுப்பு வித்தியாசம் தெரிந்தது. இது தான் “ஏசியா” என நினைக்கிறேன்.

எதையும் இலவசமாக கொடுப்பதைவிட ஒரு சிறிய வேலையை கொடுத்து செய்தபின் அவருக்கு அளிக்கப்படும் சிறிய தொகையே அவர் அதிக மகிழ்ச்சியோடு பெறுவார். “ஒருவருக்கு மீனைக் கொடுப்பதை விட, மீன் பிடிக்கச் சொல்லிகொடுப்பது மேலானது” என்று சீனப் பழமொழி கூறுகின்றது.

அன்னிய மண்ணில் கால் வைத்து விட்டோம். ஆனால் அந்த எண்ணம் மனதில் தோன்ற வில்லை. காலைபொழுது விடிந்தும், விடியாததுமான நிலை, இன்னும் ஆதவன்

வரவில்லை. ஆனால் ஒளி மட்டும் TUWI Light - விமானதளத்தை அழகுபடுத்திக் கொண்டிருந்தது. ஒளிவிளக்குகள் ஒளியை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. "எஸ்கலேட்டர்கள்" எல்லா இடங்களிலும் பொருத்தப்பட்டிருந்தாலும், நடக்க வேண்டிய தூரம் 1 கிலோ மீட்டர் இருக்கத்தான் செய்தது Toilet (Tandas) போய் எல்லாம் முடித்துக் கொண்டு Emigration Counter செல்ல மின் தொடர்வண்டி (Electrical Train) யில் சென்றோம் எமிக்ரேசன் கவுண்டர் முன்பு வரிசையில், முன்பு ஒரு மஞ்சள் கோடு போடப்பட்டுள்ளதை தாண்டி நில்லாது வரிசையில் நின்று ஒவ்வொருவராக விமானத்தில் கொடுக்கப்பட்ட, நிரப்பப்பட்ட படிவத்தையும் கடவுச்சீட்டையும், டிக்கட்டில் துண்டுச் சீட்டையும் காட்டி முத்திரை பெற்ற பின்பு, விசாவை (நுழைவுச் சீட்டை) தலைவர் காட்ட அங்கிருந்து கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டோம். அதற்குள்ளாக எங்கள் சாமான்கள் "கன்வேயர் பெல்டில்" சுற்றி வந்து கொண்டிருந்ததை பொறுப்பாக கண்டெடுத்து தள்ளு வண்டியில் சேர்த்துக் கொண்டு Exit (Keluar) வந்து சேர்ந்தோம். அங்கே சகோதரர் ராஜன் அவர்களுக்காக சிறிது காத்து நின்றோம். இருமருங்கிலும் தொங்குதோட்டங்கள் கட்டிடங்களிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது கண்களுக்கு அழகாய் இருந்தன. ராஜன் அவர்களும் அவர் குமாரர் ரூபஸ் (மருத்துவ மாணவர் - இந்தோனேஷியாவில்) இரு கார்களில் வந்து எங்களை வரவேற்றார்கள்.

நானும், துணைவியாரும் ரூபஸ் வண்டியில் (ஹோண்டா) ஏறிக்கொண்டோம். தலைவரும், அவர் குடும்பத்தினரும் ராஜன் வண்டியில் (டோயோட்டா) ஏறிக்கொண்டார்கள். ராஜன் அவர்களின் வீடு "கிளாங்" என்னுமிடத்தில் இருக்கிறது. கோலாலம்பூர் விமான நிலையத்திலிருந்து வண்டிகள் புறப்பட்டன. எல்லாம் ஆறுவழிச்சாலைகள் - அற்புதம் வண்டிகள் பாய்ந்தன என சொல்வதை விட பறந்தன எனச் சொல்லாம். சாலை வசதி அவ்வளவு அருமையாக இருந்தது. எங்கும் பச்சை பசேல் நிறம். மேடு பள்ளங்களை பார்ப்பதற்கு அழகாய் இருந்தது. ஆனால் சாலைகளில் எவ்வித மேடு, பள்ளங்களும் கிடையாது. ரப்பர் தோட்டங்கள் முழுவதும்

மாற்றி அமைக்கப்பட்டு பாமாயில் மரங்கள் வளர்க்கப்பட்டு இருக்கின்றன. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பாமாயில் மரங்கள்.

ரப்பர் வருமானத்தை விட, பாமாயில் மரங்கள் நல்ல வருமானத்தைக் கொடுப்பதால் அப்படி மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என நினைக்கிறேன். தென்னை மரங்கள் இருப்பதாக தெரியவில்லை. சாலை ஓரங்களில் வரிசையாக தேக்கு மரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன. மேடான பகுதியில் வெட்டி எடுக்கப்பட்டிருந்த மண் சுவர்கள் சாய்ந்து சாலையில் விழாதபடி சாய்வாக எடுக்கப்பட்டிருந்தன. மேட்டிலிருந்து மழைநீர் ஓடி வந்து சாலை அரிக்காதபடி சிறு, சிறு வாய்க்கால்கள் வெட்டப்பட்டு சாலை இரு மருங்கிலும் ஓடிச் செல்லும் விதமாக சிமெண்ட் பூச்சுக்கள் செய்யப்பட்டிருந்தன. இரவு முழுவதும் மழை பெய்கிறது. பகலில் நல்ல சூரிய ஒளி இருக்கிறது. அனேகமாக செம்மண் நிலம்தான் பரவி இருக்கிறது. நல்ல மண், தாவரங்கள் நன்றாக வளர்கின்றன. பக்கத்தில், தூரத்தில் என்று வானளாவிய கட்டிடங்கள் அற்புத காட்சிகள். ஹார்ன் ஒலியை எங்கும் கேட்க முடியவில்லை.

மலேசியாவில் சொல்லுமளவிற்கு நல்ல பெரிய நதிகள் கிடையாது. இந்தியாவில் கங்கை, கிருஷ்ணா, கோதாவரி, காவேரி போன்ற ஆறுகள் உண்டே ! மலேசியாவில் இரும்புத் தாதுக்கள் ஏற்றுமதியினால்தான் இவ்வளவு வருமானம் "டின்" உற்பத்தியும் அதிகம், வாழைப்பழம் அதிகம் உற்பத்தி ஆகின்ற நாடு, பாக்ஸைட் உற்பத்தி உண்டு.

அரேச அடுக்குமாடி வீடுகள், தனி வீடுகளென திட்டமிட்டு கட்டி மக்களுக்கு வீடுகளை விலைக்கு கொடுக்கின்றனர். நமது நண்பர் சகோதரர் ராஜன் வீடு கிளாங்கில் உள்ளது. தரைத்தளம் மற்றும ஒரு மாடி உள்ள வீடு. ஒரு கார் நிறுத்தும் இடம். ஆனால் இரண்டு கார்களை நிறுத்திக் கொள்ளலாம்.ஒ ரு சிறிய புல் சதுக்கம் உண்டு. வெளி கேட் உண்டு. உள்ளேயும் ஒரு சிறிய கேட் எப்பொழும் இரண்டு

கதவும் பூட்டு போட்டு பூட்டப்பட்டிருக்கும், திருட்டு பயம் உண்டு போலும், இடது பக்கம், வலது பக்கம் இடம் கிடையாது. ஜன்னலும் கிடையாது வீட்டின் முன்னும், பின்னும் நல்ல காற்றோட்டமான பெரிய ஜன்னல்கள் உண்டு. மன் வெளியில் முள் வேலிகள் உண்டு. இரண்டாவது கேட்டை கடந்தவுடன் ஒரு வரவேற்பறை, சாப்பாடு மேஜை, ஒரு வரண்டா, ஒரு கிச்சன், ஒரு பக்க அறை, ஒரு கழிவறை, மாடியின் மூன்று படுக்கை அறைகள், மாடி சென்றவுடன் ஒரு கம்யூட்டர் அறை, வீடுகள் நல்ல வரிசையில் அழகாக இருக்கிறது. தெருக்கள் நல்ல வீதியில் இருக்கின்றன. தெருவில் தென்னை, மா மற்றும் பூஞ்செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். கடைவீதிகள் நல்ல இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. தமிழில் பெயர் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. விளையாட்டு திடல்கள், பள்ளிகள், ஆலயங்கள் போன்றவைகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தன. இந்தியா போன்று ஆக்கிரமிப்புகள் கிடையாது. புல் தரைகள், எல்லா இடங்களையும் அலங்கரிக்கின்றன. இரவு நேரங்களில் சில கார்கள் ரோட்டோரத்தில் தங்கள், தங்கள் வீட்டின் முன் நிறுத்திக் கொள்கிறார்கள், அநேக வீடுகளில் இரண்டிலிருந்து மூன்று கார்கள் உள்ளன. கனவனும், மனைவியும் வேலைக்குச் சென்று விடுகிறார்கள். பிள்ளைகள் பள்ளிக்கு சென்று விடுகிறார்கள் கார் ஒரு அத்தியாவசிய பொருள். ஆட்டோ தடை செய்யப்பட்ட ஒன்று. பைக் சாலை ஓரத்தில் மஞ்சள் கோட்டிற்கு வெளியே தான் செல்ல வேண்டும். பகலில் கூட விளக்கு எரிய விட்டுக் கொண்டு தான் செல்ல வேண்டும்.

கிளாங்கில் ராஜன் வீட்டிற்குச் சென்று பார்த்தோம். அவர்கள் வீட்டில் காலை ரொட்டி (Bread) வெண்ணெய், ஜாம் தான் காலை சாப்பாடு. அவர்கள் சாப்பாட்டிற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மதியம் வேலை செய்கின்ற இடத்தில் சாப்பாடு கொடுத்து விடுவார்கள் போல, இரவு வீட்டில் எதாவது சமைத்து சாப்பிடுகிறார்கள் அல்லது வெளியே ஹோட்டலில் ஏதாவது சாப்பிட்டு விட்டு வந்து படுத்துக் கொள்கிறார்கள். இரவு ஹோட்டல் திறந்த வெளியில் வெகு நேரம் கழிக்கிறார்கள்.

29-07-2010 காலை கிளாங்கில் உள்ள ஹோட்டலில் சாப்பிட அழைத்துச் சென்றார்கள். தமிழ் ஆட்கள் வந்து விசாரிக்கிறார்கள். ஹோட்டலில் பணிபுரிபவர்கள் தமிழில் நன்றாக பேசுபவர்கள் நல்ல பிரியமாக பழகுகிறார்கள். பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், மால்களில் வேலை செய்யும் (அநேகமாக பெண்கள் தான்) தமிழர்கள் அவ்வளவு பிரியம் காட்டுவதில்லை, வெறுப்பு, விருப்பு இல்லாமல் நடந்து கொள்கிறார்கள். கம்ப்யூட்டர் பில்லிங்கில் அனேகமாக தமிழ் பெண்கள் தான் இருக்கிறார்கள். தமிழ் சாப்பாடு வகைகள் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன.

ராஜன் அவர்களுக்கு மூத்த பிள்ளை ரூபஸ் - டாக்டருக்கு படிக்கிறார். அடுத்தது பெண் பிள்ளை டாக்டருக்கு படிக்கிறார். அடுத்தது இரட்டை பெண்கள் இருவரும் உர்நிலைப் பள்ளியில் படிக்கிறார்கள். அரசு மருத்துவ தேர்வில் தேர்ச்சி பெற்று அரசு கல்லூரியில் படிப்பதால் படித்து முடிந்த பின் அரசு பணியில் ஐந்து ஆண்டுகள் பணி செய்வேன் என்று உறுதி மொழி கொடுத்து சேர வேண்டும். நான் நினைத்துக் கொண்டேன். "டாக்டருக்கு படித்து முடித்து வேலை உறுதியாகிறதே. அதுபோதும் இந்தியாவில் - தமிழ்நாட்டில் அதுவும் இல்லையே என்று" நாங்கள் படிக்கின்ற காலங்களில் ஹவுஸ் சர்ஜன் முடிவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பே வேலைக்கு ஆர்டர் வந்து விடும்.

அன்று 11 மணி அளவில் சுபாங் ஜெயா என்ற இடத்திற்கு ராஜன் பிரதரோட சகோதரர் பாலன் அவர்களின் வீட்டிற்கு சென்றோம். எல்லாமே 15 அல்லது 20 கிலோ மீட்டரில் தான் இருக்கிறது. அவர்களுடைய அன்னையும் அங்குதான் இருக்கிறார்கள். மாலை 8 மணி அளவில் அங்கிருந்து கிளாங்கிற்கு ராஜன் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். பாலன் தனது மகனுக்கு டாக்டர் படிக்க மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துள்ளதால் 31-7-2010 இரவு ஒரு பிரார்த்தனை கூட்டம் வைத்திருப்பதாகவும், இரவு உணவு கொடுப்பதாகவும் கூறி அழைப்பு விடுத்தார். சகோதரன் பாலன் வீட்டில் ஒரு சிறிய அதிசயம் வெளிகேட் ரிமோட் மூலம் இயங்குகிறது. பார்பதற்கு சினிமா பாணியில் தோன்றியது.

நானும் ஒரு மருத்துவன் என்பதால், மருத்துவ படிப்பை பற்றிய பழைய மலரும் நினைவுகள் கண்முன் தோன்றின. மதுரையில் மருத்துவ கல்லூரி துவங்குவதற்கு காரணமாய் இருந்தவர். "மாமனிதர்" காமராஜர் அவர்கள் தான். அவர்களை பெருந்தலைவர் என்று சொல்வதை விட மாமனிதர் என்று தான் என்னால் அழைக்க தோன்றியது. மதுரையில் மருத்துவக் கல்லூரி தோன்றியதால் தான் என் போன்ற சாமானியர்கள் மருத்துவராக முடிந்தது. நாங்கள் தண்ணீருக்காக விடுதியில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தோம். டாய்லட் வசதி குளியலறைகள் இருந்தும் தண்ணீர் இல்லாவிட்டால் என்ன செய்ய? விடுதிக்கு பின்புறம் ஒரு சிறு தொட்டியில் தண்ணீர் சிறிய அளவில் விழுந்து கொண்டிருக்கும். அதை சுற்றி 10 பேர் நின்று கொண்டு ஒரு மக்கில் பிடித்து, பிடித்து குளிக்க வேண்டும். சோப் போட்டவர் பாடு திண்டாட்டம் தான். இந்த நிலையில் "தமுக்கம்" மைதானத்தில் அகில இந்திய காங் கமிட்டி கூட்டங்கள் நடந்தன. காமராஜர் அவர்களே நேரில் நின்று எல்லா ஏர்பாடுகளையும் செய்தார்கள். கூட்டம் முடிந்ததும் மாவட்ட ஆட்சியர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைகை ஆற்று தண்ணீரை என்ன செய்ய? என்று கேட்டவுடன் மாமனிதர் காமராஜ் அவர்கள் "அதை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் விடுதிக்கு திருப்பி விடுங்கள் என்று யாரும் கேட்காமலேயே தானே முடிவெடுத்து சொல்லிவிட்டார்கள் ! அது போக நாங்கள் எல்லோரும் "ஹெளஸ்ஸர்ஜன்"(உள்ளிருப்பு மருத்துவ பயிற்சி) பணியில் இருக்கும்பொழுது கைச்செலவுக்கு மற்றும், உணவுச் செலவுக்கு மிகவும் சிரமப்பட்டோம். மதுரைக்கு வந்திருந்த பெருந்தலைவர் காமராஜரிடம் "எங்களுக்கு ஏதாவது சம்பளம் போட்டு கொடுங்கள் நாங்கள் 24 மணி நேரமும் மருத்துவமனையில் இருக்கிறோம், எல்லா நோயாளிகளுக்கும் நாங்கள் தான் ஊசி போடுகிறோம். நாங்கள் தான் மூத்திரம், மலம் மற்றும் இரத்தப் பரிசோதனை செய்கிறோம் என்று கூறினோம். அவர் "நர்ஸ் இருக்கு, லேப் டெக்னீசியன் இருக்கிறார்கள், அவர்கள் தான் இதையெல்லாம் செய்கிறார்கள் என நினைத்தேன் ! என்று சொல்லிக் கொண்டே, உடனே தன் உதவியாளரை அழைத்து "ஏய், வேலை செய்கிறவர்களுக்கு

சம்பளம் ஏதாவது கொடுக்க வேண்டாமா ? உடனே எல்லோருக்கும் மாதம் ரூ. 150/- போட்டு கொடுக்கச் சொல் என்று உத்தரவு இட்டுவிட்டார். அவரை எங்களால் மறக்க முடியவில்லை. அவர் தம் பதவியை விட்டு விலகி சென்றவுடன் நாங்கள் மிகுந்த வருத்தத்துக்குள்ளானோம்..

மதுரை மருத்துவக் கல்லூரிக்கு ஒரு சிறப்புண்டு. விதவிதமான நோயாளிகள் (Clinical Materials) அதிகமான ஒரு மருத்துவமனை. இதற்கு இணையானது சென்னை ராயப்பேட்டை மருத்துவமனை. 1963 மற்ம 1965 ஆம் ஆண்டில் தேசீய அவசர காலத்தில் இராணுவத்திற்கே அதிகமான மருத்துவர்களை அனுப்பி வைத்தது மதுரை மருத்துவக் கல்லூரி தான் என "இயக்குனர் - தலைமை இராணுவ மருத்துவத் துறை - டெல்லி" அவர்களே நற்சான்றிதழ் படித்துள்ளார்கள். அப்போது ராணுவத்தில் பணிபுரிய சேர்ந்தவர்களில் நானும் ஒருவன்.

ஆறுவழிச் சாலையில் ஆங்காங்கே வரி வசூல் செய்யும் கூண்டுகள் இருக்கின்றன. வாகனங்களில் செல்பவர்கள் அங்கே தாங்கள் வாகனங்களில் செல்பவர்கள் அங்கே நிறுத்தி தாங்கள் தயாராக வைத்திருக்கும் சில்லறை அல்லது ரிங்கட் நோட்டை கொடுத்தவுடன் தடுப்பு கை மேலே போய் வழி விடுகிறது. ரசீது வேண்டுமானால் கொடுக்கிறார்கள். சிலர் அடையாள அட்டை Scratch) அருகில் சென்று காட்டியவுடன் வழிகள் கிடைக்கிறது. சிலர் Pre-Paid Card ஐ அந்த தடுப்பு கைக்கு நேராக வண்டியிலிருந்த படியே காட்டுகிறார்கள். தடுப்பு உயர்ந்து வழி விடுகின்றது. ரசிக்கும்படி இருந்தது. ஹோட்டலில் இரவு புரோட்டா, தோசை சாப்பிட்டு விட்டு நல்ல தூக்கம்.

ஹோட்டலில் சாப்பிட சென்றால் முதலில் தண்ணி, என்ன சாப்பிடுகிறீர்கள் என்று தான் கேட்கிறார்கள். அதை புரிந்து கொள்ள கொஞ்சம் நேரமாயிற்று அங்குள்ளவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது காபி, டீ அல்லது ஜூஸ் ஏதாவது சாப்பிட்டுக் கொண்டே மற்றவைகளை சாப்பிடுகிறார்கள். டீ, காபி அல்லது ஆரஞ்சு ஜூஸ் அல்லது ஆப்பிள் ஜூஸ் சொல்லி விட்டால், ஒரு ஜக் நிரம்ப கொண்டு வந்து மேஜை மீது வைத்து விடுகிறார்கள். நம் ஊரில் சாப்பிட்ட பின் தானே நீராகாரம்

சாப்பிடுவோம், அவர்கள் சாப்பாட்டினோடே சாப்பிடுகிறார்கள்.

முதல் நாள் இரவு குழுதலைவர் "காலை எல்லோரும் 6 மணிக்கு தயாராக இருக்க வேண்டும் "ஜெண்டிங் ஹைலேண்ட்" செல்ல வேண்டும் என்று எல்லோரிடமும் சொல்லிவிட்டார்கள். 30-07-2010 காலை 7 மணி அளவில் அழகிய நீல நிற அக்ஸண்ட் வாடகை கார் வந்து நின்றது, ராஜன் சார் வீட்டில் "பிரட் டோஸ்ட் " பட்டர் ஜாம் தடவி சாப்பிட்டு விட்டு, இரவு தலைவர் வாங்கி வந்திருந்த பழத்தில் ஆளுக்கு 2 சாப்பிட்டு விட்டு, அவர்கள் வீட்டிலும் பெரிய ஜக் நிரம்ப காபி, ராஜன் துணைவியார் செய்து வைத்து விட்டு பள்ளி சென்று இருந்தார்கள், அதையும் ஆளுக்கு ஒரு கப் சாப்பிட்டு விட்டு எல்லோரும் வண்டியில் ஏறிக் கொண்டோம் இடவசதி நன்றாக இருந்தது சிறிது வேன் டைப் வண்டி, அநேகமாக டாக்ஸி, நீல நிறத்தில் இருக்கிறது, அல்லது அழகிய மஞ்சள் நிறத்தில் இருக்கிறது.

ஜென்டில் ஒரு உயர்ந்த மலை சிகரத்தில் கட்டப்பட்டுள்ளது. அதற்கு செல்லும் ஆறு வழிச்சாலை பாறைகள் வெட்டி எடுக்கப்பட்டு ஏற்ற, தாழ்வு இல்லாமல் சீராக செய்யப்பட்டுள்ளது. நமது ஹில்ஸ் ரிசார்ட் மாதிரி அதை சொல்கிறார்கள். ஆனால் ஒரு நண்பர் கூறுகிறார். இந்தியா போன்று மலேசியாவில் கால மாற்றங்கள் கிடையாதென சொன்னார். அதாவது வேனிற் காலம், குளிர் காலம், இளவேனிர் காலம், இலை உதிர் காலம் இங்கு பிரித்து சொல்ல முடியாது என, அது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்கு தெரியாது. பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் முன்னால் வாடகை சிற்றுந்து எங்களை இறக்கிவிட்டு விட்டு சென்று விட்டார். பின்பு வருவதாக சொல்லி விட்டு.

வாசலில் இரண்டு பெரிய மரங்கள், குயில், குரவி, பறவைகள் சத்தம் காதிற்கு இனிமையாகவும், சிறுது பயமாகவும் இருந்தது. மரத்தின் மேலே பார்த்தால் ஒரு பெரிய மலை பாம்பு சுற்றி வளைந்து தலையை நீட்டிக் கொண்டிருந்தது. ஒரு ஆந்தையும், கோட்டானும் உட்கார்ந்து கொண்டிருந்தது. அப்புறம் தான் தெரிந்தது அவையெல்லாமே செயற்கையானது

என்று, சத்தமெல்லாம் ஒலி நாடா VCD யில் இருந்து வருகின்றது என்று.

எஸ்கலேட்டரில் மேலே சென்றோம், கண்ணாடி வழியாக வெளியே பார்த்த பொழுதுதான் நாம் எவ்வளவு உயரத்தில் இருக்கிறோம். என்று தெரிந்து கொண்டு மிகுந்த ஆச்சரியப்பட்டேன். சுற்றி பச்சைபசேல் என்று மலை குன்றுகள். அவைகளில் ஆங்காங்கே வெண் மேகங்கள் அமர்ந்திருப்பது கண் கொள்ளா காட்சியாக இருந்தது. ஷாப்பிங் செய்வதற்கு அனேக பொருட்கள் இருந்தாலும், தலைவர் ஒன்றும் வாங்ககூடாதென சொல்லிவிட்டார். ஏனெனில் அங்கு எல்லாமே விலை அதிகமாய் இருக்கும் என்பதால்.மேலும் அவர்கள் நான் சில இடங்களில் சாமான்கள் வாங்கலாம் என்று சொல்வேன் அங்கு வாங்கலாம் என சொல்லிவிட்டார்கள். அப்பொழுது 1 ரிங்கட் என்பது ரூ. 14 க்கு சமம், ரூபாய் மற்றும் டாலர்களை மாற்றுவதற்கு ஆங்காங்கே இடங்கள் உண்டு. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு ஏற்ற தாழ்வுகள் உண்டு. ஒரு ரூபாய்க்கு என்ன கிடைக்கும்? என்ற மாதிரி 1 ரிங்கட்டுக்கு என்ன வாங்க முடியும்? அப்பொழுதுதான் நாம் இந்திய பணத்தை மாற்றி அநியாயமாக அன்னிய நாட்டில் செலவழிப்பதா? என்ற நெருடல் மனதில் தோன்றியது. உடனே மனம் தன்னைத்தானே தேற்றிக் கொண்டது. “அதற்குத்தானே வந்திருக்கிறோம் - கவலை வேண்டாம்” என அன்று மதியம் ஏதோ சாப்பிட்டு வைத்தோம், பார்க்க வேண்டிய இடம், பார்த்தாகி விட்டது இரவு கிளாங் திரும்பி விட்டோம்.

31-07-2010 சனிக்கிழமை காலையில் பொருட்கள் வாங்கலாமென (Shoping) சென்றோம் Jusco என்ற மாலுக்கு சென்றோம். பெட்கவர், பெண்கள் கைப்பை வாங்கினோம், பெட்கவர் நமது பாம்பே டையிங் மாதிரிதான் இருந்தது. துணி சிறிது பலமுள்ளது, இலகுவானது, மேலும், கால் பகுதியில் தலைபகுதியில் ELASTIC (ஜிப்) வைத்து தைக்கப்பட்டிருந்தன. எங்களைப் போன்ற வயதானவர்கள் அதை இரு புறமும் இலகுவாக பெட் மெத்தையில் கீழ் தள்ளி விடலாம். செட்டப்பாக படுக்கையோடு ஒன்றி பிடித்துக் கொள்ளும், படுக்கை சுருங்காது.

வீட்டிற்கு வந்து விட்டோம். மாலை 5 மணி அளவில் பாலன் அவர்களின் வீட்டிற்கு புறப்பட்டோம். எல்லோரும் சென்று விட்டார்கள். சின்ன வயலெட் - பெரிய வயலெட் (நமது குழுதலைவரின் துணைவியார்) நான் எனது துணைவியார், நால்வரும் தனியாக ஒரு காரில் சென்றோம். சின்ன வயலெட் தான் காரை ஓட்டி சென்றார்கள். வழி தப்பிதமாக சாலை வரி செலுத்திவிட்டு கடந்த இடத்திலிருந்து வேறு வழியில் சென்று விட்டார். மறுபடியும் கிளாங் வீட்டிற்கே வந்து திரும்பவும் சரியான வழியை பிடித்து சுபாங் ஜெயா விற்கு பாலன் வீட்டைச் சென்றடைந்தோம் இதற்கிடையில் இரண்டு, மூன்று முறை சாலை வரிச் செலவு செய்ய வேண்டியதாயிற்று ! பார்டிக்கு காலதாமதமாக சென்று சரியாக சாப்பாட்டிற்கு சேர்ந்து விட்டோம் சின்ன வயலெட் பிள்ளைகள் நான்குபேரும் அவரை கட்டிப் பிடித்துக் கொண்டனர் எல்லாம் முடிந்து இரவு 11 மணி அளவில் ராஜன் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம், சின்ன வயலட் செல்லை எடுத்து வராதது கொஞ்சம் சிரமத்தை எற்படுத்தி விட்டது. நாம் செல்ல வேண்டிய இடங்கள் 15 கிலோ மீட்டர் அல்லது 20 கிலோ மீட்டர் தான் இருக்கிறது. வழி தப்பி விட்டால் 100 கிலோ மீட்டருக்கு மேல் சென்று விடுவோம். கவனம்.

01-08-2010 ஞாயிறு இன்று கொஞ்சம் எல்லோருக்கும் ஓய்வு கிடைத்தது மாலை புத்ர ஜெயா என்னும் இடத்திற்கு சென்றோம். அங்கு தான் புத்ர ஜெய கன்வென்ஸன் சென்டர் கட்டடம் உள்ளது. வெளியில் சற்று தூரத்தில் நின்று பார்த்தால் அது முழு கட்டடமும் போலீஸ் தொப்பி போன்று காணப்படுகிறது. அங்குதான் "எந்திரன்" பட ஆடியோ

வெளியிடும் விழா நடந்தது. நாங்கள் அங்கு செல்வதற்கு முதல் நாள் இரவுதான் நடந்தது. ரஜினிகாந்த் - ஐஸ்வர்யாராய் நிற்கும் கட்அவுட்க்கு முன் நின்று எல்லோரும் படம்

எடுத்துக் கொண்டோம் அந்த வளாகம் பெரிய அளவிலானது. அந்த ஹால் அவ்வளவு பெரியது.

அங்கு பாராளுமண்டபம், கிராணைட்டினால் கட்டப்பட்ட மாஸ்க் மற்றும் மன்னரின் அரண்மனை எல்லாம் பார்த்தோம். அங்கு அதிகமான அரசு அலுவலகங்கள் உள்ளன. இரவு ராஜன் வீட வந்து சேர்ந்துவிட்டோம். பாலன் அவர் தன்னுடைய காரில் அழைத்துச் சென்றார்.

02 - 08 - 2010 சிங்கப்பூர் பயணம் மலேசியா - சிங்கப்பூர் பயணம் ரோடு வழியாகவும் சொல்லாம். விமானம் மூலமாகவும் செல்லாம் தலைவர் சாலை வழியையே தேர்ந்தெடுத்தார். சைட் சீயிங் நன்றாக இருக்குமென சாலை வழி மொத்தம் 600 கிலோ மீட்டர், காலை 7 மணி அளவில் பென்ஸ் வேன் வந்து சேர்ந்தது. அருமையான குளிர்சாதனம் செய்யப்பட்ட வண்டி. ஓட்டுனர் தமிழர், வேலூரைச் சேர்ந்தவர். மலேசியா சென்று 9 ஆண்டுகள் ஆகின்றதென அவர் கூறினார். இரண்டு நாட்களுக்கு வேண்டிய பொருட்களை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டோம். சாலை ஓரங்களில் கொஞ்சம் தள்ளி இயற்கை உபாதைக்கு ஒதுங்க நல்ல Toilets (Tandas) உள்ளன. சிற்றுண்டிகள் (Packed items) பேக்கரிகள் கிடைக்கும். ஜோஹர்பாகு என்னும் இடத்திற்கு வந்தோம். இதுதான் மலேசியாவின் எல்லை பகுதி. அங்கேயே மதிய உணவு முடித்துக் கொண்டோம்.

“இமிகிரேஷன்” என்னும் விமான தளம் போன்ற இடத்திற்கு சென்றோம் எஸ்கலேட்டர் மூலம் சென்றோம். கம்ப்யூட்டரின் முன் ஒரு கருப்பு பெண்ணும், நடுத்தர நிறமுமான ஒரு ஆணும் இருந்தார்கள். என்னவோ அவர் சொன்னார். உடனே அந் பெண் என்னைப் பார்த்து ஆங்கிலத்தில் சிறுது நேரம் உட்காருங்கள் என்று சொல்லி அருகில் உள்ள நாற்காலியை காட்டினாள். யாருக்குமே என்னவென்று புரியவில்லை. உடனே ஒரு செக்யூரிட்டி, என்னுடன் வாருங்கள் சார் என்று ஆங்கிலத்தில் சொல்லி என்னை அழைத்துக் கொண்டு எஸ்கலேட்டரில் மேல் தளத்திற்கு அழைத்து சென்றார். அங்கு ஒரு அறையில் ஒரு நடுத்தர வயது பெண் என்னை அழைத்து கம்ப்யூட்டரின் முன் உட்காரவைத்தாள்.

உடனே நான் ஆங்கிலத்தில் "நான் ஒரு ஓய்வு பெற்ற மருத்துவர், நான் துணைவியாருடன் வந்திருக்கின்றேன்" என கூறினேன். அவள் "ஒன்றும் கவலைப்படாதீர்கள்" என்று சொல்லிவிட்டு என் கடவுச்சீட்டு, மற்றும நாங்கள் நிரப்பி கையொப்பமிட்டுள்ள சீட்டை கம்ப்யூட்டரில் போட்டு எடுத்து வேண்டிய அச்சை கடவுச்சீட்டில் பதித்துவிட்டு "நீங்கள் போங்கள், தெந்தரவுக்கு சாரி" என்று கூறி அனுப்பிட்டார்.

என்னை செக்யூரிட்டி அழைத்து "நீங்கள் உங்கள் குழுவுடன் சேர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறி வெளியில் கொண்டு வந்து விட்டு விட்டார்கள். என் துணைவியார் "ஐயோ சுற்றுலாவும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் எங்களை ஊருக்கு அனுப்பி விடுங்கள்" என தலைவரிடம் சொல்ல ஆரம்பித்து விட்டார். ஏதோ என்னை விட்டுவிட்டார்கள். ஏதாவது வேண்டாத தவறு கண்டுபிடித்த மாதிரி ஜோடனை செய்து விட்டால் என்ன செய்வது? நான் அப்பொழுது ஒன்றுமே பயப்படவில்லை. கொஞ்சம் பயந்த ஆசாமி என்றால் ஹார்ட் அட்டாக் வந்து விடாதா, ஒரு அன்னி நாட்டு முதியவனை அவர்கள் இப்படியெல்லாம் செய்யக்கூடாது. இப்படி செய்தால் "டூரிஸம்" எப்படி முன்னேறும்? அன்னிய செலவாணி எப்படி கிடைக்கும்? அவர்கள் தமிழ் நாட்டுக்காரர்களை கொத்தடிமைகளாக மட்டுமே வைத்துக் கொள்ளத்தான் விரும்புகிறார்களே தவிர வேறொன்றுக்கும் விரும்புவதில்லை.

சிங்கப்பூர் சென்றுவிட்டு மறுநாள் அதே ஆசாமி அதே இடத்தில் இருந்தான். அந்த கருப்புப் பெண் இல்லை. சற்று தூரத்தில் என்னை பார்த்துவிட்டவன் உதட்டோரத்தில் ஒரு மௌன சிரிப்பு வருவதை கட்டுப்படுத்திக் கொண்டு வேறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

மாலை 4 மணி அளவில் ஹோட்டல் சென்றடைந்தோம். உடன் தானே ஊரை சுற்றி பார்க்க கிளம்பி விட்டோம் "சிம்பள் ஆப்" சிங்கப்பூர் பார்த்தோம். சிங்கத்தின் வாயிலிருந்து தண்ணீர்

விழுந்து கொண்டிருந்தது. துரியன் பில்டிங் பார்த்தோம். விமான தளம் சென்றோம். கடற்கரையை சுற்றி பார்த்தோம். கடற்கரை ஓரமாக இருக்கின்ற சாலைகளையெல்லாம் மண்ணும், சரலும், பாராங்கற்களையும் போட்டு அகல படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நம் நாட்டில் இருக்கின்ற சாலைகளையே பராமரிப்பதுவுமில்லை, அகல படுத்துவதுமில்லை ? இரவு ஒரு இந்திய உணவகத்திற்குச் சென்று இரவு சாப்பட்டை முடித்துக் கொண்டோம். அந்த உணவகம் தான் புகழ் பெற்ற "கோமளவல்லி" என்னும் தமிழ் உணவகம்.

இரவு சிங்கப்பூரில் "ஷாப்பிங்" சென்றோம். முஸ்தாபா மற்றும் மொஹைதீன் போன்ற பெரிய கடைகள் இரவு, பகல் பாராது திறந்திருக்கின்றன. தளங்கள் அதிகமுள்ளன. எல்லாம் எஸ்கலேட்டர் மூலம் இணைக்கப்பட்டிருக்கின்றன. கடைகள் உள்ளேயே நிரப்ப நடக்க வேண்டிய இடங்களும் இருக்கின்றன. மலேசியாவை விட சிங்கப்பூரில் எல்லாம் விலை அதிகம் தான் தங்கத்திற்கு கூட வரி உண்டு. யாரும் எதுவும் வாங்கியதாக தெரியவில்லை.

காலையில் எழுந்து விட்டோம். ஓட்டுனர் ஜோகர்பாருவில் தங்கிவிட்டு சிங்கப்பூர் வந்து சேர்ந்து விட்டார். காலைச்சாப்பாடு ஹோட்டலிலே கொடுத்துவிட்டார்கள். உடனே சந்தோஷா ஜலண்ட் சென்றோம். கேபிள் கார்கள் அங்குமிங்கும் சென்று கொண்டிருந்தன. கம்பி அறுந்துவிழுந்து விடுமோ என பயம் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். முன்பை விட அதில் பயணம் செய்ய அதிக கட்டணம் வசூலிக்கிறார்கள் என தலைவர் சொன்னதால் அதில் யாரும் அதற்கு செல்லவில்லை. பஸ்ஸில் அழகிய செடி, கொடிகள் நிறைந்த அந்த இடத்தை சுற்றி பார்த்தோம். பேருந்து இறக்கி விட்ட இடத்தில் கடற்கரை இருந்தது 'சில வெள்ளையர்கள் சன் பாத்' எடுத்துக் கொண்டிருந்தார்கள் Toilet வசதி அருமையாக செய்யப்பட்டிருந்தது. காத்திருக்கும் இடம் ஓய்வெடுப்பதற்கு வசதியாக இருந்தது. தண்ணீர் இன்றி சுயமாக சுத்தப்படுத்திக் கொள்ளும் கழிப்பிடம். அந்த இடத்தில் ஆங்கிலத்தில் ஒரு போர்டு வைத்திருக்கிறார்கள். "நீங்கள் இப்பொழுது ஆசியாவின்

தென்கோடியில் நின்று கொண்டிருக்கிறீர்கள்" என்று. பின்பு பறக்கு ரயில் நிலையம் சென்று மின் தொடர் வண்டியில் ஏறி "யுனிவர்சல் ஸ்டூடியோ " சென்றடைந்தோம். அதை பார்த்து விட்டு சிங்கப்பூர் வந்து மதிய உணவை செட்டிநாடு ஹோட்டலில் முடித்துக் கொண்டோம். பின்பு மலேசியா நோக்கி திரும்பினோம். ராஜன் வீட்டை இரவு 10 மணி அளவில் வந்தடைந்தோம்.

"பென்ஸ்" வேன் பிரயாணம் சௌகரியமாக இருந்தது. சிங்கப்பூர், மலேசியா சாலை ஆறுவழிச்சாலை - மரங்கள், புதுவாகனங்கள் (கார்கள், பைக்குகள்) சுரங்கப் பெருள் கனிமப் பொருட்கள் எல்லாம், 26 டயர்கள், 28 டயர்கள் பொறுத்தப்பட்ட பெரிய நீள பேருந்துகளில் ஏற்றி செல்லப்படுகின்றன. அவைகளை பார்க்க ஆச்சாரியமாக இருந்தது. வழியில் ஓரிடத்தில் சிறிது உட்புறமாக, ஓட்டுனர் வாகனத்தை நிறுத்தினார், இயற்கை உபாதைகளை முடித்துக் கொண்டோம். சிறிய உணவு விடுதி இருந்தது. தொழுகை இடம் அற்புதமாக கட்டி இருக்கிறார்கள், கழிவறைகளில் ஆண், பெண் துப்புரவு பணியாளர்கள் நல்ல வசதியான, சுத்தமான சீருடைகள் அணிந்து பணியில் இருக்கிறார்கள். ஆணும், பெண்ணும் தமிழர்களே ! அநேகமாக எல்லா இடங்களிலும் தமிழர்களைத் தான் பார்த்தோம். நம் பெட்டிக்கடை போன்ற கடையும் அந்த "காம்ளக்ஸில்" இருந்தது. அதில் மலாய் உடையில் ஒரு அழகிய பெண் (மங்கோலிய வம்சம்) இருந்தது. எங்களை சிரிப்புடன் ஆங்கிலத்தில் வரவேற்றது. என் துணைவியாரைப் பார்த்து நீங்கள் என்ன கறுப்பாய் இருக்கிறீர்கள் ? என்று கேட்டு விட்டார். அதுநாள் வரை என் துணைவியார் தான் "மாநிறம்" "புதுநிறம்" என்று நினைத்துக் கொண்டிருந்தவருக்கு சிறிது "ஷாக்" தான். சிகப்பு ஒரு அழகு "சுடுச் சாப்பாடு ருசி தானே" என பாட்டி சொன்னது நினைவிற்கு வந்தது.

04 - 08 - 2010 புதன்கிழமை ராஜன் சகோதரருடைய சகோதரர் குமார் அவர்கள் எங்களை காலை 10 மணி அளவில் கிளாங்கில் இருந்து கோலாலம்பூருக்கு தன்னுடைய காரில் அழைத்து செல்வதாக இருந்தது. இதற்கிடையில் ராஜன் வளர்த்துவரும் "சீனு" என்ற பூனை எங்கள் அனைவருக்கும்

ரொம்ப பிடித்துவிட்டது. அதனுடன் அடிக்கடி விளையாடிக்கொண்டிருப்பேன். ராஜன் தான் அதற்கு உணவூட்டுவார். அவரை கண்டவுடன் வாலைக் குழைத்துக் கொண்டு ஓடி வரும். அதையும் ஒரு புகைப்படம் எடுத்து வந்துள்ளேன்.

வளர்ப்பு பிராணிகள் வைத்திருப்பது நல்லது தான். நம்முடைய கவலைகளை அவைகளை பார்த்து சிறிது மறக்கலாம். அவைகள் தங்களுடைய கவலைகளைச் சொல்லாது. நாம் அவைகளை பார்த்து மகிழ்ச்சி அடையலாம். முதியோர்கள், இதய வியாதிகள் உள்ளவர்கள் வளர்ப்பு பிராணிகள் வளர்க்கலாம்.



மஹா அலெக்ஸாண்டரே, இந்திய மா மண்ணில் அவருடைய குதிரை மடிந்துவிட்டதால் நிலை குலைந்து விட்டார். நாடுபிடிக்கும் ஆசையை விட்டுவிட்டு தான் வென்ற இந்திய இடங்களை போரஸ் மன்னனிடமே திரும்ப கொடுத்து விட்டு தன் நாடு திரும்பிவிட்டாராம்.

சரியான நேரத்திற்கு குமார் வந்துவிட்டார். சிறிது நேரம் அளவளாவி விட்டு அவர் காரிலே கோலாலம்பூர் புறப்பட்டு சென்றோம். "மொஹைதீன் மற்றும் ஹனிபா" கடைகளில் பொருட்கள் வாங்கினோம். எவை எல்லாம் குறைந்த விலைகளில் கிடைத்தனவோ அவைகளை வாங்கினோம். K.L டவர் மற்றும் இரட்டை (TWin Tower) எல்லாம் பார்த்தோம். உலோக சாயம் (Metalic Colour)



அடித்திருப்பது போல் பளிச்சென தெரிகிறது. கே.எல். டவரை விட பெரியதாக கட்ட வேண்டுமென அவர்களே டவின் டவர் கட்டியுள்ளனர். சரித்திரப்புகழ் பெற்றது. நினைவுச் சின்னங்கள் என்று சொல்லும் படி எதுவும் இல்லை. இந்தியாவில் அனேகம் ! மதியம் சரவண பவன் ஹோட்டலில் அருமையான சாப்பாடு சாப்பிட்டோம்.

இரவு கிளாங் வந்து ராஜன் வீட்டில் தஞ்சம் புகுந்து விட்டோம். இரவு சாப்பாடும் அங்கேயே கழிந்தது

05 - 08 - 2010 காலை ரூபஸ் கடைகளுக்கு அழைத்துச் சென்றார். மாலை மறுபடியும் "கம்டோர்" என்னும் இடத்திற்கு ஷாப்பிங் சென்றோம். இங்கு எல்லா பொருட்களுமே விலை மலிவாக உள்ளது. பேரப்பிள்ளைகளுக்கு நிறைய Cheep & Best T.சர்ட்கள் வாங்கினோம்.

06 - 08 - 2010 காலை 10 மணி அளவில் ஜெபர்ஸன் அவர்கள் காரில் வந்து சேர்ந்தார். நம்ம "நாசரேத்" சகோதரர், மலேசியாவில் நல்ல உயர்ந்த பதவியில் இருந்தார். நமது குழு தலைவர் சந்திரசேகரன் அவர்களுக்கு நெருங்கிய உறவினர். குமார், ராஜன், பாலன் மூவரும் நமது தலைவரின் பெரியம்மா பிள்ளைகள் என்பதை இப்பொழுதுதான் குறிப்பிட வாய்ப்புக் - கிடைத்தது. ஜெபர்ஸன் அவர்கள் எங்களை கோலாலம்பூர் (KL) அழைத்துச் சென்றார். கோர்ட் அதை சுற்றி உள்ள இடங்கள் நன்றாக இருந்தன. கோர்ட் முன்பு நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டோம் அங்குள்ள நல்ல பூங்காக்களுக்கு அழைத்துச் சென்றார். மறுபடியும் மொகைதீன் மற்றும் ஹனீபா சென்றோம். மதியம் ஹோட்டல் சரவணபவன் சாப்பாடு. மாலை Big Mega Sale சென்றோம். அந்த கட்டிடம் சரியான பெரிய கட்டிடம் கூட்டம் மிக அதிகம் வித விதமான கேமராக்கள், ஹேண்டி டிவி கேமராக்கள் இப்படி பல, பெண்களை "சாரியை வைத்து கழுத்தை மூடிக் கொள்ளுங்கள்" என்று எச்சரிக்கை பலமுறை காதில் விழுந்தது. "நிக்கான்", "கேனான்" "ஒலிம்பஸ்" போன்ற கேமராக்கள் விற்கப்பட்டன. விலை நல்ல

குறைவாக இருந்தன. மற்ற எலக்ட்ரானிக் பொருட்கள் இந்திய விலையில் தான் இருக்கின்றன.

இரவு கிளாங் வந்து சேர்ந்தோம். ஜெபர்ஸனிடம் உங்களுக்கு ஊர் ஞாபகம் வருமா? என்று கேட்டதற்கு, "எப்பொழுதாவது வரும், இங்குள்ள வசதிகள் அதை மறக்கச் செய்துவிடும். ரொம்ப நாள் ஆகிவிட்டால் தன்படி ஊருக்கு கிளம்பி விடுவேன். ஊர் வந்து சேர்ந்தவுடன், சொந்த, பந்தங்களை ஆசையாய் போய் பார்ப்போம் "அப்புறம் நம்மூரில் வசதிக் குறைவுகள் நம்மை எப்பொழுது மலேசியா போவோம் என நினைக்கத் தூண்டிவிடும்" என்று பதில் கொடுத்தார். இது ஒரு நினைவு கூற வேண்டிய காரியம்தான். தமிழ்நாட்டு சுற்றுலா பயணிகளைத்தான் அதிகமாக பார்க்க முடிந்தது. மேலை நாட்டினரை அவ்வளவாக பார்க்க முடியவில்லை.

07 - 08 - 2010 ஊர் கிளம்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. பெட்டிகளை சரியாக கட்டி எடுக்க ஆரம்பித்தோம். சரியாக மதியம் 12 மணி அளவில் கம்டோர் மற்றும் லிட்டில் இன்டியா இடங்களுக்கு கடைசி நேர பொருள் வாங்குவதற்காக சென்றோம் மாலை 3.30 மணிக்கு வீடு திரும்பினோம். ராஜன் குடும்பத்தார் மதியம் சாப்பாடு கொடுத்து உபசரித்தனர். 05.30 க்கு ராஜன் வீட்டிலிருந்து புறப்பட்டு விமான நிலையத்தை 9 மணி அளவில் சென்றடைந்தோம். அவர்கள் தாயார் எல்லோரும் விமான நிலையத்திற்கு வழி அனுப்ப வந்திருந்தனர்.

சாமான்களை நிறுத்து பார்த்த பெண் அளவு அதிகமாக இருக்கிறது. அனேகமாக நீங்கள் பணம் செலுத்த வேண்டுமென சொன்னார். தலைவர் பெட்டிகளை திறந்து எடையை குறைத்து விடுவோம் என சொன்னார். அதிகமாய் இருக்கும் சாமான்களை ராஜன் குடும்பத்தாரிடம் கொடுத்து விடுவோம் என கூறி என்னுடைய பெட்டியை குறைத்தார். அதில் என் சேவிங் பிளேடும், சிறிய கத்திரிகோலும் இடம் மாறி விட்டது. தலைவர் சாமான்களை அப்படி வைத்து விட்டு அந்தப்பக்கமாய் போய் ஒரு தமிழர் - மலேசியா ஏர்வேஸில் பணியில் இருந்தவரை பார்த்து பேசினார்.

அவர் உடனே அவருக்கு மேல் இருந்த அதிகாரியை பார்த்து எல்லாம் சரி செய்து விட்டார்கள். நாங்கள் "கன்வேயர் பெல்ட்" அருகில் செல்லும்பொழுது முதலில் எங்களுக்கு தடங்கல் செய்த பெண் அங்கு இல்லை. எஸ்கலேட்டரில் மேலே சென்று விட்டோம் என்னுடைய கைப்பையை ஸ்கேனிங் போட்ட நடுத்தர வயது பெண் செக்யூரிட்டி என்னுடைய பையை எடுத்து "இதை திறவுங்கள்" என்று சொன்னார். "தங்கள் பை கிளங்கிற்று" என்று ஆங்கிலத்தில் சொன்னார். - திறந்து பார்த்தால் பிளேடு பாக்கட் ஒன்று கத்திரிகோல் ஒன்று - சிரித்துக்கொண்டே அந்த அம்மா அவைகளை எடுத்துக்கொண்டே தாங்கள் போங்கள் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார்.

இரவு 9.30 மணி விமானத்தில் ஏறினேன். விமானம் ஏறும்பொழுது தான் நினைத்தேன்

"சாரே ஜஹாங்கி அச்சா ஹை, ஹிந்துஸ்'த்தான் ஹமாரா,
ஹமாரா, சாரே ஜஹாங்கி அச்சா ஹை"

என்று சென்னையை விமானம் இரவு 10.30 வந்தடைந்தது. மொத்த பிரயாண நேரம் 3 மணிநேரம் என்பது நினைவிருக்கட்டும். இந்திய மண்ணில் கால் பதித்த உடன் "ஏன் நம் இந்தியா இன்னமும் பலமடங்கு பெருகாமல், முன்னேறாமல் இருக்கிறது? ஏதோ சில சக்திகள் நம் முன்னேற்றத்தை பின்னுக்கு இழுக்கிறதே" என்று என் மனதில் தோன்றி மறைந்தது.

மெர்க்குரி பிரிண்டர்ஸ், பாளை. ☎ 2560292

ஆசிரியரைப்பற்றி ...

டாக்டர். பூவை. அருள் அவர்கள் ஒரு ரண சிகிச்சை மருத்துவர் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து தமிழ்நாடு மருத்துவத்துறையில் இணை இயக்குனர் சுகாதார பணிகள் பணி செய்து ஓய்வு பெற்றவர்.

தனது கன்னி முயற்சியாக இந்தப் பயணக் கட்டுரையை வரைந்துள்ளார். படித்து அனுபவித்து ஆதரவு தாரீர்.

Dr. பூவை. அருள்

51/E, மாசிலாமணி நகர்,
குலவணிகர்புரம்,
திருநெல்வேலி - 627 005.

மெர்க்குரி பிரிண்டர்ஸ், பாளையங்கோட்டை. ☎ 2560292